ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2106/35 - 2019 ජනවාරි මස 18 වැනි සිකුරාදා - 2019.01.18
2106/35 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### *1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)*

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/MDB/4/2/1/64/06.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு
அமைச்சின் இல.: L03J/95/FR/178.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**(நகல்ஸ் மலைசாரலின் பாதுகாப்பிற்காக காணியை எடுத்துக் கொள்ளல்) :**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், மெததும்பர பிரதேச செயலாளர் பிரிவில், உடசியபத்துவ தெற்கு கோரளை சிறு பிரிவில் உள்ள ரம்புக்பொத (807) கிராம அலுவலர் பிரிவில் ரம்புக்பொத கிராமத்தில் அமைந்துள்ள, கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2009.03.11 ஆந் திகதிய இறுதி வரைபட இல. மு. பி. மஹ. 6733 இல் இல. 02 மற்றும் 03 எனக் காட்டப்பட்டுள்ள 2.6135 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய தோதுலுகந்த எனும் கீழ் விபரிக்கப்பட்ட இரு காணித்துண்டுகள் :

*1. **துண்டு இல. 02***
காணியின் பெயர்: தோதுலுகந்த; விபரம்: காடு; ஆரம்ப உரிமை கோருபவர்: ரம்புக்பொத, மெதமஹநுவரயில் வசிக்கும் எச். எம். டபிள்யு. டி. பீ. ஹேரத் ஏக்கநாயக்க; விஸ்தீரணம் : 0.2835 ஹெக்டயார்.

*2. **துண்டு இல. 03***
காணியின் பெயர்: தோதுலுகந்த; விபரம்: காடு; ஆரம்ப உரிமை கோருபவர்: ரம்புக்பொத, மெதமஹநுவரயில் வசிக்கும் எச். எம். டபிள்யு. டி. பீ. ஹேரத் ஏக்கநாயக்க; விஸ்தீரணம் : 2.3300 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மெததும்பர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும், விசாரணைகளின் போது காணி உறுதிப்பத்திரம் மற்றும் எழுத்து மூல ஆவணங்கள் என் முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனவும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏ. எம். விக்ரமாரச்சி,
பிரதேச செயலாளர்,
மெததும்பர.

பிரதேச செயலகம்,
மெததும்பர,
2019, சனவரி 14.

2 - 143